# Sub Court, Eraniel

**O.S. No. 11/2022**

Date: 13.11.2024.

வா.சா.1 - திரு. அசிலர்.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1, 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கில் ரூ.5,00,000/- பரிகாரம் கேட்டிருக்கிறேன். 9 பிரதிவாதிகளில் ஒவ்வொருவரிடமிருந்தும் தனித் தனியாக எவ்வளவு பரிகாரம் வேண்டும் என்று நான் குறிப்பிட்டு வழக்கு செய்யவில்லை. எனவே 1, 3 மற்றும் 5 வது பிரதிவாதிகளிடமிருந்து குறிப்பிட்டு என்ன பரிகாரம் கோருகிறேன் என்பதை என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகள் அனைவருக்கும் நான் வா.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல் முதல் பக்கத்தில் 6 வதாக மரிய செபஸ்தியான் என்பவரை குறிப்பிட்டிருக்கிறேன், அவரையும் உட்படுத்தி தான் வா.சா.ஆ.3 ல் ரூ.30,00,000/- நஷ்ட ஈடு கேட்டிருக்கிறேன் என்றால், சரிதான். ஆனால் இந்த வழக்கில் அந்த மரிய செபஸ்தியான் என்பவரை பிரதிவாதியாக சேர்க்காததற்கு பிரத்யேகமான காரணங்கள் ஏதுமில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P.No.22630/2017 ல் அந்த மரிய செபஸ்தியானை கட்சியாக நான் சேர்க்கவில்லை. அந்த ரிட் மனுவில் ரூ.30,00,000/-, 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் தர வேண்டும் என்று தான் கோரியிருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ல் அந்த ரிட் மனுவில் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி 4 வது எதிர்மனுதாரராகவும், 3 வது பிரதிவாதி ரிட் மனுவில் 6 வது எதிர்மனுதாரராகவும் நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அந்த ரிட் மனுவில் இந்த வழக்கின் 1, 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால், சரிதான். இந்த நிலையில் நான் இந்த வழக்கை மேற்படி ரிட் மனுவின் ஆணையின் அடிப்படையில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அதே போல் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது போல 12.08.2017 ல் இருந்து 2 மாதங்கள் கழித்து, எந்த சிவில் நீதிமன்றத்திலும் நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. அந்த அறிவிப்பிற்கு பின்னர் நான் இந்த சிவில் வழக்கைத் தான் 2022 ல் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். காவல்துறை 1 ம் பிரதிவாதியின் அலுவலகத்திற்கு சென்ற போது, அந்த விசாரணையின் போது அசல் வழக்கு எண்.167/2021 என்ற வழக்கு

அப்போது நிலுவையில் இல்லை. 1ம் பிரதிவாதியின் அலுவலகத்திற்கு போகும் போது, 1ம்பிரதிவாதி மரிய செபஸ்தியான் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் என்னை கூப்பிட்டு விசாரித்தார் என்றால், சரிதான். அந்த விசாரணையின் முடிவில் என்னுடைய கைப்பட சில வாக்குமூலங்கள் எழுதிக் கொடுத்தேன் என்றால், அச்சுறுத்தி, வற்புறுத்தி எழுதி வாங்கினார்கள். அந்த விசாரணையில் எனக்கும் மரிய செபஸ்தியானுக்கும் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் தான் நான் மேற்படி வாக்குமூலங்களை எழுதிக் கொடுத்தேன் என்றால், சரியல்ல. அந்த வாக்குமூலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் தவறியதால் தான் மரிய செபஸ்தியானின் தகப்பனார் எனது மனைவிக்கு எதிராக அசல் வழக்கு எண்.167/2021 தாக்கல் செய்தார் என்றால், சரிதான். அந்த சிவில் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகத் தான் நான் காவல் அதிகாரிகளின் மீது புகார் கொடுத்து, எனத மனைவியின் பெயரில் உள்ள சொத்துக்களை பாதுகாக்க உண்மைக்கு புறம்பான புகார்களை கொடுத்தேன் என்றால், சரியல்ல. நான் குறிப்பிடுவது உண்மையாக இருந்தால், 1, 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகளுக்க எதிராக நான் 1 வருட கால வரம்பிற்குள் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவை உண்மை இல்லாத காரணத்தால் தான் பின்னிட்டு காலம் தாழ்த்தி 2022 ல் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி இரணியல் காவல் ஆய்வாளர் சுதேசன் ஆவார். எனது வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ல் 5ம் பிரதிவாதி சுதேசனை கட்சி சேர்க்கவில்லை. அதே போன்று உயர் நீதிமன்ற ரிட் மனுவிலும் 5ம் பிரதிவாதி சுதேசனை கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். ஒவ்வொரு காலகட்டத்திற்கும், எனது வெறுப்பிற்கு ஏற்ற விதமாக ஒவ்வொரு காவல் அதிகாரிகளை சேர்த்தும் நீக்கியும் வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. உண்மையிலேயே நான் வழக்கில் குறிப்பிடுவது போல எனக்கு தவறுகள் செய்யப்பட்டிருந்தால், 2017 வழக்கறிஞர் அறிவிப்பிலும், உயர் நீதிமன்ற ரிட் மனுவிலும் அனைத்து அதிகாரிகளையும் சேர்த்து இருப்பேன் என்றாலும், அவ்வாறு நான் கூறுவதில் உண்மைத் தன்மை இல்லாத காரணத்தால் தான், மேற்படி நபர்களை மாற்றி வழக்கு செய்கிறேன் என்றாலும், சரியல்ல. உயர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வழக்கின் 3வது பிரதிவாதி ஜின்னா பீர் முகமது, ரிட் அப்பீல் எண்.252/2022 தாக்கல் செய்து, அதில் பிறப்பிக்கப்பட்ட 17.03.2022 ன் ஆணைப்படி, ரிட் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, அவருக்கு எதிராக உடனடியாக துறை வாரியான நடவடிக்கை எடுக்க வேண்டாம் என மாற்றப்பட்டது என்றால், அது விபரம் எனக்க நினைவில் இல்லை. அதே

போன்று 1ம் பிரதிவாதியும் ரிட் அப்பீல் எண்.105/2022 தாக்கல் செய்து, அவருக்கு எதிரான துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால், சரியல்ல. இந்த நிலையில், துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற எனது முதல் விசாரணையிலும், பிராதிலும் குறிப்பிடுவது போல நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.